25.07.2022
O.S. 75/2018

P.W.1 Shanthi

<u>கு.வி.</u>

நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் ராமலட்சுமி நகர், வேலுமகால் அருகில் குடியிருக்கிறேன். பிரதிவாதி தனபால் எனக்கு உறவினர் என்று சொன்னால் சரிதான். நான் வீட்டுக்குடித்தனம்தான் என்றால் சரிதான். இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் நிரூபண வாக்குமூலம் மற்றும் கூடுதல் நிரூபண வாக்குமூலம் அனைத்தும் நான் தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். நான் என்ன வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் பிரதிவாதியிடம் கிரைய ஒப்பந்தம் செய்துகொண்டு ரூ.75 லட்சம் என்று பேசப்பட்டு ரூ.70 லட்சம் முன்பணமாக கொடுத்துள்ளோம். பத்திரம் எழுதி தருகிறேன் என்று சொல்லி நாள்கடத்தி வருகிறார். அதனால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எந்த தேதியில் ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் 13.4.2015 ல் ஏற்பட்டது. எங்களுடைய ஒப்பந்தத்தில் காலக்கெடு எவ்வளவு காலம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் ஒரு மாத கெடுவுக்குள் எழுதி கொடுப்பதாக தெரிவித்தார். ஒரு மாத காலக்கெடு என்று எழுதிக்கொடுத்திருப்பதாய் சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. இந்த நிலத்தினுடைய சர்வே எண் என்ன, அதன் விஸ்தீரணம் என்ன என்றால் அதன் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தம் மேற்கொள்ளும்போது வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் எனக்கு தெரியாது. ஆனால் கிரைய ஒப்பந்தம் என் பெயரில்தான் என்றால் சரிதான். ஒரு வழக்கறிஞருடைய அறிவுரையின் பேரில் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டோம். என் வீட்டின் வரவு செலவு கணக்குகளை என் கணவர்தான் பார்க்கிறார் என்றால் சரிதான். பிரதிவாதிக்கும் என் கணவருக்கும் வரவு செலவு உள்ளது என்றால் வரவு செலவும் உள்ளது. அவர் எங்களுக்கு நெருங்கிய உறவினர். 9 மாத கெடுவுக்குள் பிரதிவாதி கிரைய ஒப்பந்தத்தினை நிறைவேற்றுக்கொடுக்காததனை பொறுத்து என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் நாங்கள் கேட்டபோதெல்லாம் எழுதி தந்து விடுகிறேன் என்று கூறிக்கொண்டே இருந்ததால் உறவுமுறை என்பதனால் கொஞ்சம் பொறுத்துப் போனோம். அந்த கிரைய ஒப்பந்தமானது பதிவு செய்யப்படாத ஒப்பந்தம் என்று சொன்னால் சரிதான். அந்த ஒப்பந்தத்தினை நாங்கள் ஏன் பதியவில்லை என்றால் நெருங்கிய சொந்தம், உறவுமுறை என்பதால் பதிவு செய்யவில்லை. இந்த ஒப்பந்தத்தில் யார் யார் சாட்சி கையொப்பம் இட்டிருக்கிறார் என்றால் எங்கள் அலுவலகத்தில் வேலை பார்க்கும் முருகன் என்பவரும், அருணகிரி என்ற உறவினரும் கையொப்பமிட்டிருக்கிறார்கள். பிரதிவாதிக்கு பாகத்தில் வந்த சொத்துக்குத்தான் நாங்கள் கிரையம் பேசினோம் என்றால் அதுபற்றி தெரியாது. இந்த சொத்து இருக்கும் வடமதுரை சார்பதிவக எல்லைக்குள்பட்டது என்றால் சொன்னால்

சரிதான். ஆனால் எங்களுடைய கிரைய ஒப்பந்தத்தில் வேடசந்தூர் சார்பதிவகம் என்று எழுதியிருக்கிறோம் என்று சொன்னால் தெரியவில்லை. எங்கு வைத்து ஒப்பந்தம் பேசப்பட்டது என்றால் நோட்டரி வழக்கறிஞர் திரு செல்வம் என்பவருடைய அலுவலகத்தில் வைத்து பிரதிவாதி பணம் ரூ.70 லட்சம் பெற்றுச்சென்றார். நோட்டரி வழக்கறிஞரும் இந்த பத்திரம் செய்யப்படவேண்டும், இல்லாவிட்டால் பத்திரம் செல்லாது என்று சொல்லவில்லையா என்றால் உறவுமுறை கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லிவிட்டதால் நாங்கள் பதிவு செய்யவில்லை. ரூ.70 லட்சம் பணம் கொடுத்த நாங்கள் ஏன் இன்னொரு ரூ.5 லட்சம் கொடுத்து பத்திரத்தை பதிவு செய்யவில்லை என்றால் பத்திரம் எழுதி தருகிறேன் எழுதி தருகிறேன் என்று நாள் கடத்தியதால் கொடுக்கவில்லை. எந்த தேதியில் நாங்கள் பத்திர அலுவலகத்தில் தயாராக இருந்தோம் என்றால் அதுபற்றி தெரியாது. 3.8.2017 ல் நாங்கள் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினோம் என்றால் சரிதான். உறவுனர் என்ற காரணத்தினால்தான் நாங்கள் பொறுத்துப்போனோம். கடந்த 10.12.2017 ல் ரூ.20 லட்சம் பணம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதாக காசோலை வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம் என்றால் சரிதான். அந்த வழக்கு இன்னும் கோப்பிற்கு எடுக்கப்படவில்லை என்றால் சரிதான். 25.11.2017 ம் தேதி என் கணவர், பிரதிவாதி ரூ.10 லட்சம் பெற்றுக்கொண்டதாக வழக்கு ஒன்றினை தாக்கல் செய்திருக்கின்றாரா என்றால் தாக்கல் செய்திருக்கின்றார். இந்த வழக்கிற்கு பின்னிட்டும் கூட எப்படி என் கணவர் மற்றும் நான் ரூ.20 லட்சத்திற்கும், பின்னிட்டு ரூ.10 லட்சத்திற்கும் வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் அதுவும் உறவுமுறை காரணமாகத்தான் கொடுத்தோம். இந்த வழக்கில் சொத்துக்களை முன் ஜப்தி செய்ய மனு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த மனு முழு விசாரணைக்கு பின்னர் தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி சென்னையில் உள்ள Blue Bird என்ற online நிறுவனத்தில் பணத்தை முதலீடு செய்து தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். அந்த Blue Bird நாங்கள் முதலீடு செய்தோம் என்றால் தவறு. நாங்கள் முதலீடு செய்யவில்லை. அந்த நிறுவனம் நொடித்து போன காரணத்தினால் எங்களிடம் ரூ.10 கடன் வாங்கினார் என்றால் சரிதான். அதற்கு ரூ.100 க்கு 5 வட்டி போட்டோம் என்றால் தவறு. பேங்க் வட்டிதான் போட்டோம். அவருடைய தொழில் நழிந்து போனதால் அவருடைய தகப்பனாருடைய சொத்தினை என் கணவருடைய நண்பர் பேருக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் எனது கணவர் சாட்சியாக இருந்துள்ளார் என்றால் சரிதான். என்னுடைய கணவர்தான் அவருடைய நண்பர் பெயருக்கு சொத்தினை வாங்கச்சொல்லிவிட்டு அதற்குண்டான புரோநோட்டு மற்றும் காசோலைகள், வெற்றுப்புரோநோட்டு, இந்த வழக்கின் பத்திரங்கள் ஆகியவற்றை என் கணவரே வைத்துக்கொண்டார் என்றால் சரியல்ல. பிரதிவாதியினுடைய தகப்பனார் செக், புரோநோட்டை என் கணவரிடம் கேட்டாரா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. மீதியுள்ள

புரோநோட்டுக்களை ரூ.7 லட்சத்துக்கு எனது கணவருடைய தங்கை பேரில் போட்டுள்ளார் என்றால் போட்டுள்ளார். என் கணவரது மைத்துனர் பேரில் ரூ.7 லட்சம் போட்டுள்ளார். என் கணவரது சித்தப்பா மகன் அருணகிரி பேரில் ரூ.8 லட்சம் போட்டுள்ளார். என் கணவரது மைத்துனர் சிவசக்திவேல் பேரில் ரூ.9 லட்சம் போட்டிருக்கிறார். என் கணவரது சித்தி மகன் பேரில் ரூ.7 லட்சம் போட்டிருக்கிறாரா என்றால் அதுபற்றி தெரியாது. நான் ரூ.90 லட்சம் கொடுப்பதற்கு எனக்கு என்ன அடிப்படை வருமானம் என்றால் எங்களுக்கு தோப்பு, துரவு உள்ளது, என் கணவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறார், நான் சீட்டு பிடிக்கிறேன் இதன் அடிப்படையில் வருமானம் உள்ளது. நான் சீட்டு பிடிப்பதற்கு அங்கீகாரம் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. எனக்கு இவ்வளவு பணம் கொடுப்பதற்கான வசதியும், வருமானமும் இல்லை, நான் பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தப்பட்ட வரவு செலவு குறித்து வருமானவரி சமர்ப்பித்துள்ளேனா என்றால் சமர்ப்பித்துள்ளேன். ரூ.90 லட்சம் எப்படி வருமானம் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் எனக்கு நினைவில்லை. பிரதிவாதி தன்னுடைய பத்திரங்கள், காசோலைகள் ஆகியவற்றை திருப்பிக்கொடுக்கவேண்டும் என்று திண்டுக்கல் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருக்கின்றாரா என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு உண்மையாயிருப்பின் நான் முறையான வடமதுரை சார்பகத்தில் வில்லங்க சான்று போட்டு எந்த எல்லைக்குட்பட்ட சார்பதிவகத்தில் கிரையம் பதியவேண்டும் என்று பார்த்து அதன்படி வில்லங்கம் போட்டு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டிருப்பேன், எனக்கு அந்த விவரமே தெரியாததால்தான் வேடசந்தூர் சார்பதிவகம் எல்லைக்குட்பட்டுள்ளது என்று தவறாக காட்டியுள்ளேன் என்று சொன்னால் உறவு முறையின் அடிப்படையில் கேட்டதால்தான் இந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டோம். உறவு முறையின் அடிப்படையில் பத்திரம் பதியவில்லை என்று கூறும்போது பத்திரம் பதியப்படாததால் நான் முன்பணத்தை திரும்ப கேட்கிறேன் என்று கூறியிருப்பது தவறு என்றால் அது சரிதான். நான் கேட்டுள்ளவாறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல, என் கணவரிடம் சொல்லி காசோலைகளை திரும்ப கொடுக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

V R LATHA Digitally signed by V R LATHA Date: 2022.07.26 15:40:55 +0530

Prl.District Judge,
Dindigul.